**வில்கமுவ பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 06 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வில்கமுவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் பிடியாணைக் கட்டணங்கள் பட்டியலிடல் ரூபா 3,932,203 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 8,463,567 என பதிவு செய்யப்பட்டதன் காரணமாக வருமானம் ரூபா 4,531,362 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,966,573 கூடுதலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) நிலையான வைப்பிற்கான வட்டி ரூபா 67,681 ஆக இருந்த போதிலும், ரூபா 108,921 என கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிலையான வைப்புக்கள் மற்றும் வட்டி வருமானம் ரூபா 41,240 என்பன கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 21,500 ஆன கேளிக்கை வரி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டின் போது நிர்மாண கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக பட்டியலிடப்பட்ட ரூபா 1,283,466 தொகை மீளாய்வாண்டின் போதும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக பட்டியலிடப்பட்டதன் காரணமாக மூலதன வருமானம் மற்றும் செலவினம் உட்பட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த பேரகஹதன்ன கம்மெத வீதியை அபிவிருத்தி செய்யும் நிர்மாணத்தின் ரூபா 249,709 ஆன கொடுப்பனவு கடன்கொடுத்தோராக கருதி கொடுப்பனவு செய்தமையால் கடன்கொடுத்தோர் மீதி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நிலுவை வாரச்சந்தைக் கட்டணங்கள் ரூபா 232,488 மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 46,800 என்பன பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 100,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) நிர்மாணக் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 3,829,878 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களில் ரூபா 6,311,917 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் அக்கணக்கின் மீதி ரூபா 2,482,039 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 119 நூலகப் புத்தகங்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2014 ஆம் ஆண்டின் கணக்கீட்டுக் குறைபாட்டை சீராக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்புக்கள் சரியாக இன்மை காரணமாக மூலதனச் செலவினம் ரூபா 72,544 மற்றும் திரண்ட நிதியம் ரூபா 66,066 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 35,827,280 தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடனும் ஒப்பீடு செய்த போது தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்ட அசாதாரணங்களின் பெறுமதி ரூபா 3,029,124 ஆக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தொங்கல் கணக்கின் கீழான ரூபா 657,609 தொகையான செலவு மீதிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 6,763,947 வரவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,106,338 ஆன வரவு மீதியொன்றாக இருந்தது.

### 1.3.4 கிடைக்க வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமுறாது முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 4,365,811 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,612 தொகையான கணக்கு மீதியை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 05 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 9,329,687 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே விபரமாகக் காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 07 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3,452,089 பெறுமதியான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | விலைகோரல் மூலம் போட்டி ரீதியான காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளாமல் காப்புறுதி முகவர் மூலம் சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களை காப்புறுதி செய்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 26,037 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,576,228 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 455,125 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,121,103 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

(அ) நிதி விளைவுகளில் ரூபா 10,121,103 ஆன அதிகரிப்பிற்கு 04 வருமான விடயங்கள் பிரதானமாக தாக்கமளித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் பிடியாணைக் கட்டண வருமானம் ரூபா 4,531,362 ஆல் மிகை கணிப்பீடு செய்யப்பட்டமையால் உள்ளவாறான நிதி விளைவுகளில் அதிகரிப்பு மாற்றமடையும்.

(ஆ) நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 06 நிகழ்ச்சித்திட்டங்களின் 02 நிகழ்ச்சித்திட்டங்களில் வருமானத்தை மிகைத்த செலவினமொன்று காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மூலதன பெறுவனவுகளை விஞ்சிய மூலதனச் செலவினம் காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

---------------------------------------

### 2.3.1 வருமான சேகரித்தலில் செயலாற்றல்

----------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான நீர் செயற்திட்டங்களின் 121 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து நீர்மானிகள் பொருத்தப்படாமல் நிலையான கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய பாரியளவு வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 வீதவரி

--------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 291,096 ஆக இருந்ததுடன், அம்மீதியில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 60,509 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 186,638 ஆன மீதியொன்றும் உள்ளக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 நீர்க் கட்டணங்கள்

-----------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 747,011 ஆக இருந்ததுடன், அம்மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த 161,823 ஆன மீதிளும் உள்ளக்கப்பட்டிருந்தன.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,335,095 தொகையான நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 46,800 தொகை முத்திரைக் கட்டணங்களாகவும் கிடைக்க வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் 06 பதவிகளுக்குரிய 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அரச ஊழியர்களாக மோட்டார் சைக்கில்களைப் பெற்றுக்கொண்ட மூன்று உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்களாகவும் மோட்டார் சைக்கில்களைப் பெற்றுக் கொண்டிருந்தனர். ஒரு மோட்டார் சைக்கிலுக்கான பணத்தை உரிய உறுப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

### (அ) லேடியங்கல பொது வாசிகசாலை அபிவிருத்தி

மேற்குறித்த செயற்திட்டத்திற்கு ரூபா 1,000,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீகஹஅமுன விவசாய அமைப்புடன் 2015 பெப்ரவரி 26 ஆந் திகதி உடன்படிக்கையொன்றுக்கு ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. சங்கத்தின் நிதி இயலுமை மற்றும் முன்னர் நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பான மதிப்பீடொன்றோ மேற்கொள்ளப்படாமையால் 2015 யூலை 26 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்நிர்மாண வேலை 2016 மே 05 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3. செயற்திட்ட தாமதம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் திண்மக் கழிவுப் பொருள் நிகழ்ச்சித்திட்டத்தின் கொம்போஸ்ட் பிரிவினை நிர்மாணிப்பதற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 500,000 ஆன ஏற்பாடு குறித்த காலஎல்லைக்குள் நிறைவேற்றப்படாமையால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்வரும் வேலைகள் தொடர்பாக 2015 நவம்பர் 28 அந் திகதி

(ஆ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 05 உத்தேச செயற்திட்டங்களில் 04 செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் தொழில்நுட்ப சேவைகள் நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 685,000 பெறுமதியான 09 செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 02 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகள் மீள்சுழற்சி வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படாது உழவு இயந்திரத்தின் மூலம் நாள்தோறும் நாமினிஓயா குளத்திற்கு மேற்பகுதியிலுள்ள திம்பிரின்னாவ அரச காணியில் இடப்பட்டிருந்தது. இக்கழிவுகள் பிரிக்கப்படாமல் சுற்றாடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் இடப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 93 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,428,000 தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 30 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது.

(இ) 10 வருமானத் தலைப்புக்களில் மதிப்பிடப்பட்ட ரூபா 2,720,000 வருமானத்தில் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே நிதிஏற்பாடுகள் மாற்றப்பட்டதன் பின்னரும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்றைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை தாபிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக்குழுவை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

### (அ) விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைகக்கு சொந்தமான ரூபா 750,000 பெறுமதியான 53-4732 ஆம் இலக்க கெப் வண்டி, ரூபா 840,000 பெறுமதியான 49-8220 உழவு இயந்திரம் மற்றும் ரூபா 90,000 பெறுமதியான 67-0339 ஆம் இலக்க உழவு இயந்திர டிரேலர் என்பன 2 வருட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு 2016 மே 02 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) ஒப்பந்த நிருவாகம்